ஓலை 59 | ஓசை 178 | பிப்ரவரி 2024

# அகர முதல இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கிய பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

**உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து**

மெய், வாய்,கண், மூக்கு, செவி என்னும்
ஐந்து யானைகளும் தத்தம் புலன்கள் ஆகிய
ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை ஆகியவற்றில்
செல்லாமல், அவற்றை மன உறுதி என்னும் அங்குசத்தால்
காப்பவன் எல்லாவற்றிலும் சிறந்ததாகிய வீட்டுலகிற்கு
ஒருவிதை ஆவான்.

அகர முதல

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிர்வாகக் குழு

**கு.செல்வமுத்துகுமரன்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா & அ.வில்சன்**

## அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர், டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

**அகர முதல இலக்கிய பேரவை**

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com


# மெய்யினைப் போற்றுவதே மெய்

பா வகை : கலித்துறை
(தேமா+தேமா+ கூவிளம்+தேமா+ புளிமாங்காய்)

உண்மை கூறும் நாவுதான் ஓங்கும் ஒளியாமே
மண்ணில் பேச்சு மாண்பினை மாற்றும் மணியாமே
பண்பை பாங்காய் பாரினில் ஏற்றும் படையாமே
எண்ணம் தன்னில் போற்றிடும் செல்வம் இதுதானே

பொய்கள் பேசி புண்ணென வாழ்தல் பொறையாகா
மெய்யே என்றும் மேன்மையை கூட்டும் மிடுக்காக
எய்தும் சொல்லில் எட்டிடும் உண்மை எடைபோடும்
உய்க்கும் பாதை ஊன்றியே ஊட்டும் உயிர்கூட்டை

போற்று மெய்யை போற்றிடு நாளும் புடைசூழ
ஆற்றும் உண்மை ஆர்த்திடும் உன்னை அடைகாத்து
கூற்றில் மெய்யும் கூட்டமும் கூட குணம்வாழும்
ஈற்றில் எல்லாம் இன்பமாய் மாறும் இனிதாக



கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயமுத்தூர்

# நூலிடை ஆடும் இதழழகி!

ஓலையிலே ஒளித்தாளே,
ஒய்யாரச் சொல்லழகி!
ஒவ்வொன்றாய் விரித்தாளே,
ஒண்தமிழாள் தொல்லழகி.



கீழடியோ, மேலழகோ
கொத்தான சொத்தழகி
கீறித்தான் திகைத்திடவே
திசை காட்டும் திறனழகி!

வைகையிலே விளையாடி
வளர்பொதிகை மலரழகி,
கைதழுவிக் காவிரியைக்
காதலித்தக் கட்டழகி'

தொகையாக வகையாகப்
பெற்றெடுத்தாள் பேரழகி
தெய்வத்தின் துதியாகித்
தினம் தொழுவாள் தேனழகி

அலை தாண்டி, மலை தாண்டி,
வலைதாண்டும் கண்ணழகி
நிலைதாண்டி தான் அழியும்
நிலைகாணா வடிவழகி

கலையாகிச் சிலையாகி,
கவியானாள் நூலழகி
மலையாகி மதியாகி
மண்ணாண்டாள் அறிவழகி

செறிவான பண்பாட்டைச்
சொன்னாளே செவ்வழகி
அறிவோடு அறம் சொல்லும்
அகிலத்தின் முதலழகி!

அன்றைக்கும் இன்றைக்கும்
அழகான நடையழகி
என்றைக்கும் வாழ்வாளே!
எமைத் தாங்கும் தமிழழகி

கவிஞர் திருமதி.இரா.இராஜாமணி,ஈரோடு

இந்தியாவைப்பற்றிய, உலகத்தின் பார்வையை, இரண்டு விதமாகப்பிரிக்கலாம்.

ஒன்று, சுவாமி விவேகானந்தர் ஐயா அவர்கள், அமெரிக்க சிகாகோ பல்கலைக்கழகத்துக்குள் நுழைவதற்கு முன்பு.
இரண்டு,அங்கே அவர் உரையாற்றிவிட்டு வெளியே வந்த பிறகு.

அவரின் அற்புதமான உரைக்கு முன்பு வரை, இந்தியாவைப்பற்றி மிகத்தவறான ஒரு அபிப்பிராயம் தான், உலகத்தாரிடம் இருந்தது. "என்னருமை அமெரிக்க சகோதர சகோதரிகளே",
என்று அவர் ஆரம்பித்ததுமே,உலகின் அனைத்து மத ஆன்மீகவாதிகளும் குழுமியிருந்த அந்த மாநாட்டில்,
உலக மக்கள் அனைவருமே ஒரு தாயின் பிள்ளைகளே, நாம் அனைவருமே சகோதர சகோதரிகளே
என்ற மேன்மையான வாக்கியத்தைக்கேட்டு, கரவொலி அடங்க வெகு நேரமாகியது. தொடர்ந்து அவர் ஆற்றிய உரை முழுக்க மனிதனின் மேன்மையைப்பற்றியதாகவும், இந்தியாவின் பெருமையைப் பற்றியதாகவும் இருந்தது.

அதன் பிறகு தான், இந்தியாவைப்பற்றிய பார்வையே, உலகத்தாரிடம் மாறியது. தற்பொழுது நாட்டு நடப்புகளை பார்த்தால், உலகத்தினருக்கு, நம் தேசத்தைப்பற்றி பழைய அபிப்பிராயமே வந்து விடுமோ
என்ற கவலை ஏற்படுகிறது. இன்றைய இளைஞர்கள், சுவாமி விவேகானந்தர் ஐயாவை படிக்க வேண்டும் என்பது, என் ஆவல்.

-நடிகர் ராஜ்கிரண்

**விவேகானந்தரின் சிகாகோ உரை**
**இந்தியாவின் பிம்பத்தை உலகளவில் அழகாக்கி**
**அற்புதம் செய்த மறை**




கவிஞர் ராஜ் ஆரோக்கியசாமி,டோல்கேட்

# மரக்கொத்திப் பறவை


காலையிலேயே எதைச்
சொல்ல வருகிறாய்?
மின் கம்பத்தின் உச்சியில்
மரக்கொத்திப் பறவை.
நீ குத்திக் காட்டுவதுக்
கொஞ்சம் புரிகிறது
உன் அலகால்
மீண்டும்
எங்கள் மனதைக்
கொத்தாதே
நாங்களும்
மரம் வளர்ப்போம்.



கவிஞர் இரா.மதிராஜ்

# நிலைமை ஒரு தேடல்

பல பின்னணிகளின் முன்னணி கண்ணீர்
ஒவ்வொரு உயிருக்கும் ஒரு உதாரணம்
உயிரைக் காப்பாற்ற உணர்வோடு போராட்டம்
ஒவ்வொரு நொடியும் வலி வழியறிய
மாறாத மனநிலை நிலைமை ஒன்றே
குருதியோடு கனவுகளும் நினைவுகளும்
நிலை மாறாத வாழ்க்கையில் மாற்றம் ஒன்றே
மாறுபட்ட மனம் மனம் அறிய மடமை நிலை
ஒவ்வொரு தேடலிலும் ஒவ்வொரு பாதை
நாம் தீட்டும் வண்ணமே வாழ்க்கையின் சின்னம்
இங்கு நிலைமை தான் பலரின் எண்ணம்
கடந்து செல்வோம்
காலம் கொள்ளும் போது
நம் கடமையும் வெல்லும்
காணலையும் கவர்ச்சியாக்கி
கண்ணீர் இல்லாமல்
களையெடுக்கும் மண்ணுலகில்
மரணித்துப் போகட்டும்
மண்ணுடன் மனித மான்பு
வாழ்க்கையில்
நிலைமையும் ஒரு தேடலே



கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# மருதம் வீற்றிருக்கும் மாதோ!

அகர முதல

மேகங்கள் மின்ன
மேட்டினில் பெய்நீர்
அசைந்தே பள்ளம்
அடைந்திட ஓடும்.
ஓடையான ஆறு
சோடை போகாது

அரவ ஓடு பாதையாகி
அரவம் இட்டிட
பொழிலிடை வாழ்
பொலிவுறு மஞ்ஞை
அயில் விழி மகளிராய்
அரங்கினில் ஆட




செய்யருகே வளர்ச்
செந்தாமரை மொட்டுகள்
கூப்பிய கரங்களால்
கூர்ந்தே வரவேற்க
கருங்குவளை மலர்கள்
கண்விழித்து பார்த்திட
அசையும் நீரது
அசையும் திரைச்சீலையாம்.

மகரயாழ் இசையாய்
மகிழ்ந்திட வண்டினிசை
நீரிடையே சங்குகள்
நித்தம் தூங்க
சேற்றிடையே ஆமைகள்
சேர்ந்தே உறங்க
உடல்பிணி போக்கிட
உரமாய் உணவூட்டும்

நன்செய் நிலங்கள்
நல்விளைச்சலைத் தந்திட
அறுவடை செய்தவை
ஆங்காங்கே குவிய
மாடுகளைக் கட்டி
மாசகற்றி போரடிக்க
காற்றில் பதரகற்றி
களிப்போடு ஓலமிடும்

மள்ளர் நிறைந்திட
மருதம் வீற்றிருக்கும் மாதோ.

கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# தீபகற்பத்தில் ஓருலா

இந்து சமுத்திர நித்தில அழகில்
இவையெல்லாம் எம்மாத்திரம்
இருப்பினும் இறையாண்மையால்
இதுவும் பேரழகு தான்.

நீண்ட இடைவெளி கடந்து
ஆழ்கடல் தாண்டிய வான் வீதியில்
செயற்கை இறகு விரிக்க
மீண்டுமோர் உலா .

பிள்ளைகளின் அரவணைப்பில்
தீபகற்பமும் சற்றுக் குளிர்கிறது
பரவாயில்லை.



பார்வை நெடுகிலும்
கொங்கிரீட் காடுகளாய் விரிகின்றன.

பசுமை வெளிகளில்
குளிர்ந்த சுவாசங்களில்
இசைந்து போனது என் மனது

தேசம் மறந்து வாழ்க்கையின் தேடலுக்காய்
தேக சுகமும் மறந்து
உறவுகளின்றி வாழும்
நம் தேசத்தின் வாரிசுகளை வாழ்த்துகிறது
பயணம் தோறும் என்னுள்ளம்.

கவிஞர் செண்பகச் சோலையாள்,ஆய்ஷ்(இலங்கை)

# பாரியன்பன் நாகராஜன் கவிதைகள்

பூத்துக் காய்த்துக்
குலுங்கும் மரத்தில்
கூடடையும்
பறவைகள் கூட்டமாய்
அமர்ந்து பசியாறிச் சென்ற
பிறகுதான்
அதன் முகத்தில்
காண முடிகிறது
அளவற்ற மகிழ்ச்சி!
/



எங்கு ஒரு மரம்
பூத்துக் காய்த்துக்
குலுங்குகிறதோ
அங்கு மண்வளம்
நீர்வளம் மட்டுமல்ல
மரங்களை நேசிக்கும்
நல்ல மனிதர்களும்
இருக்கின்றார்கள் என்று
அர்த்தம்.
/

அமரரான அப்பாவை
ஞாபகப்படுத்துகிறது
அப்பாவின் சட்டையுடுத்திய
வயற்காட்டு பொம்மை.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# உன்னை எனக்கு பிடிக்கும்

உன் அன்பு பிடிக்கும்
நீ என் மீது செலுத்தும்
அக்கறையும் பிடிக்கும்

உன்னை சிரிக்க வைத்து
பார்ப்பது பிடிக்கும்
நீ எனக்காக தரும்
அன்பு பரிசுகள் பிடிக்கும்




தொல்லைகள் இல்லாமல் நகரும்
உன் மறைமுக காதல் பிடிக்கும்
என்னை நீ அடைந்து விட எடுத்த
முயற்சிகள் பிடிக்கும்


குறை இல்லாத அழகு இருந்து
உன் நிறைவான உள்ளம் வரை பிடிக்கும்
என்னை நினைத்துக் கொண்டே
மௌனமாக வாழ்க்கையை கடக்கிறாயே
அதுவும் பிடிக்கும்

எல்லாமே பிடித்திருந்ததும்
என்னால் உன்னோடு சேர்ந்து வாழ முடியவில்லையே
இதுதானா தீராக காதல், சேரா காதல்.

கவிஞர் சாதீக் பாத்திமா சம்ஹா,மூதூர்

# விழியில் விழுந்த அழியாக் கோலமே

இதயத்தில் நுழைந்தவளே
இனிமைதனைத் தந்தவளே
இதமாய் அணைத்தவளே
இருகரங்களைப் பற்றியவளே



இன்பம் பெருகியதே
இன்னிசை மீட்டியதே
இளந்தென்றல் வருடவே
இளமையும் சிலிர்த்ததே

இலக்கணமானக் காவியமே
இன்னிசையான ஓவியமே
இலக்கியத்தின் நாயகியே
இசைமீட்டும் பைந்தமிழே

இன்னிசை மீட்டியவளே
இசைவானப் பூந்தளிரே
இனியவளே காதலின்
இளவரசியும் நீதானே

இனித்திடும் செவ்விதழும்
இளையவள் உன்னிடமே
இக்கணமும் நினைக்கிறேன்
இமையாகியே துடிக்கிறேன்

இவ்வுலகில் உனையன்றி
இணையானவள் யாருமில்லையே
இசைவானாய் என்னுள்ளே
இசையாகவே கலந்திட்டாயே


இயற்கையின் எழிலாய்
இறைவனும் படைத்திட்டானே
இல்லாத இடையால்
இழுத்திட்டாய் என்னையே

இரும்பான நெஞ்சத்தையும்
இனிதாக ஈர்த்திட்டாயே
விழியில் விழுந்து
அழியாக் கோலமான நங்கையே

கவிஞர் பெ.வெங்கட லட்சுமி காந்தன்,விருதுநகர்

# தனித்துவமானவன்

வானத்தில்
கோடிக்கணக்கான
விண்மீன்கள் இருந்தாலும்,
வானத்திற்கு
நிலவுமட்டுமே தனித்துவமானது.
அதேபோலதான்
கோடிக்கணக்கான
மக்கள் இருந்தாலும்,
எனக்கு நீமட்டும்தான்
தனித்துவமானவன்.



கவிஞர் பெ.சுரேகா,திண்டுக்கல்



அகர முதல

# காற்றின் மொழி

காற்றோடு ஓசையில் செவிக்கு இனிமையாய்
என்னோடு தினமும் உறவாட வந்தாய்
அதிகாலை வேளையிலே செய்தியாய் கவிதையாய்
சமையல் குறிப்பாய் வானிலையாய் பாடலாய்
வாசகனின் மனம் குளிர வருகிறாய்
தித்திக்கும் செங்கரும்பாய் நாளும் இனிக்கிறாய்
தென்றலின் போது தாலாட்டுப் பாடுகிறாய்
மழைக் காலத்தில் நேயர்களுக்கு விடுமுறையாய்
பள்ளிக்கு செய்தியையும் அனுப்பி வைக்கிறாய்
சுட்டிக் குழந்தைக்கும் மன மகிழ்வாய்
இதயத்தோடு இதயம் ஒன்றாய் சேருகிறாய்
பேருந்திலும் உனது பாடல் காதலாய்
காதலிக்கு உற்சாகத்தோடு வலம் வருகிறாய்
ஜன்னல் ஓரக் காற்றோடு உரசுகிறாய்
விடிய விடிய ஊரெங்கும் ஒலிக்கிறாய்
ஒலிக்கும் சத்தத்திலும் இனிமையான ஆதரவாய்
கவலைகள் எல்லாம் மறக்கும் ஊடகமாய்
தாலாட்டு பாடி நித்திரையும் தருகிறாய்
ஒற்றை வரியில் ஒரே கம்பியாய்
உனக்குள் எத்தனை எத்தனை புதுமையாய்
செவிக்கு விருந்து கொடுத்து மகிழ்கிறாய்
நீயில்லா வாழ்வு எனக்கேது வானொலியே



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

அகர முதல

# அன்னை

மின்மினி கண்மணியாய்
நெஞ்சோடு ஒட்டிக்கொள்ளும் நினைவில்
இசைகின்ற தாள லயங்களாய் தாயும் தந்தையும்
நொடிகள் கூட தாயை பிரிந்ததில்லையே
அவள் சேலை முந்தானையில் தொற்றிக்கொள்ளும்
முகதலையாய் நாங்களும் பற்றிக்கொண்டோமே
தந்தை கை கோர்த்து கடை வீதி அளந்தோமே
அவர் நடைக்கு ஈடுக்கட்ட முடியாது
அவர் தோள் தொற்றிக்கொள்வோமே
அடம் பிடித்தேனும் பிடித்தத்தை
வாங்கிக் கொள்வோம் அவரிடம்
அன்னையவளிடம் அவர் மாட்டிக்கொண்டாலும்
காட்டிக் கொடுக்காது காத்து விடுவார்
மாட்டிக்கொண்டால் மறுமுறை அனுப்ப மாட்டாள்
அன்னையவள்



அவள் பாசக்காரி
வேசத்தவரிடமும் பாசத்தை அள்ளித்தந்தவள்
நம்பிக்கை கொண்டே பலதை இழந்தாலும்
ஏனோ பாசத்தை காட்டிக் கொண்டே இருந்தாள்
பொய்த்து போனவர்களால் எனது இயல்பை
நான் ஏன் தொலைக்கணும் என்றதில் உறுதி கண்டாள் அவள்
ஜாடிக்கேற்ற முடிதான் எனது அன்னை தந்தை
ஏழ்மை கண்டாலும் ஏளனமாக யாரையும் கடந்ததில்லை
ஏழ்மையிலும் கேட்டோருக்கு கொடுக்க மறந்ததில்லை
அவர்கள் எமக்காக விட்டு சென்றது நினைவுகளும்
அவர்களுக்காக நாம் சிந்தும் கண்ணீர் துளிகளும்தான்.

கவிஞர் சஹ்னாஸ் பேகம்,முதலைப்பாளி(இலங்கை)

# சிந்தனை செய் மனமே

சிந்தனை செய் மனமே
செயலில் இறங்கு தினமே
நிந்தனை தவிர் இதயமே
நிலவுபோல் குளிர் இதமே

எளிமையில் இன்புறு மனமே
தனிமையில் பண்படு பதமே
துணிவினில் நிலைபெறு நிதமே
பணிவினில் ஒழுகிடு இனிதே

சத்தியம் பேணுதல் நலமே
சமரசம் செய்வதும் தகுமே
வித்தைகள் கற்பது வரமே
விமர்சனம் ஏற்பதும் திறமே



ஒப்பிட்டுப் பார்ப்பது தவறே
ஓரவஞ்சனை புரிவது இழிவே
தப்புக்கள் செய்வது தாழ்வே
தராதரம் பார்ப்பது கீழ்த்தரமே

கர்வம் உதறுதல் கனிவே
கருணை ஏற்றுதல் அழகே
பொறுமை கொள்வது நன்றே
போதனை ஏற்பது அறமே

கருத்தில் நல்லெண்ணம் தவமே
காயங்கள் மறப்பது சுகமே
களிப்புத் ததும்பிட நிறைவே
கண்ணியம் காப்பது அறிவே

சஞ்சலம் அகற்றிடு உணர்வே
வெஞ்சினம் விரட்டிடு உளமே
செம்மை கண்டிடு சிரசே
சிறப்பாக வாழ்தல் பரிசே

நன்னெறி வழுவா பலமே
நயமாக வாழ்ந்திட வளமே
சிந்தனை செய் மனமே
சிந்தையில் ஏற்றிடு தினமே

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# காலச் சக்கரம்

காலச்சக்கரம் ஏறி காற்றில் மிதந்திட
கடந்த கால வசந்தங்களை கண்டு களித்திட
பால்ய பருவம் தந்தையின்
மடியில் தவழ்ந்திட வைத்தது!
பள்ளிப்பருவம் பாடம் பயின்றிட
இளமைப்பருவம் கூட நடந்திட
நழுவிப்போன நிமிடங்கள் நம்மை
அடைந்திடும்!
கனவுக் காணும் எதிர்காலம்
கைகூடிட காலச்சக்கரம் சுழன்றால்
எண்ணியதெல்லாம் உன் கைவசம்
எட்டிப் பறித்திட்ட ஆணவம் தலைகீழாய்
உன்னைத் தள்ளும்!
கைவிட்டுப் போன நினைவுகளும்
கைகூடா எதிர்பார்பார்ப்புகளும் இல்லாமல்
உன் கனவு மெய்ப்பட
இன்று உழைத்திட!
வெருட்டிடும் நிகழ்காலம் உன்னை
வாழ வைக்கும்!
கனவுகளிலும், கற்பனைகளிலும்
காலச்சக்கரத்தை எண்ணி காலம்
கடத்திட எண்ணாதே மானிடா!
கடமையை செய் பலனை எதிர்பாராதே!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை

# இறையின் ஓவியங்கள்

மைக்கல் ஆஞ்சலோவென்ன
பின்னால் வந்த ரபாயலென்ன
அவனின் அபூர்வ தூரிகையின்
விசிறல்களுக்கு முன்னால்.
அத்தனை பேரும்
தோற்றுப் போவறன்றோ!

லியோனார்டோ டாவின்சியென்ன
பின்னால் வந்த
பப்லோ பிகாஸோவென்ன
அத்தனை பேரும்
அவனது அதிசயக் கிறுக்கல்களில்
பிறந்த பிரதிகளன்றோ!



மர்லின் மன்றோ வென்ன
பிந்திப் பிறந்த சிற்பிகளென்ன
மண்ணில் மலைகள் செதுக்கி
விண்ணில் கோலங்கள் வரைந்திட
தினமொரு அத்தாட்சிகளாய்
அத்தனையும் விசித்திரமன்றோ!

இங்கு நீயென்ன நானென்ன
இறையை மறந்து வாழ்வதென்ன
தினமொரு அழகில்
உலகை மறந்து தீதில் வீழ்வதென்ன
அத்தாட்சிகளாய் அத்தனையும்
நம் அறிவின் தெளிவிற்கன்றோ!

மலை முகடுகளில் பரவிடும் பனிச்சாரல்கள்.
வளைந்து நெளியும் நதிகளின் ஊறல்கள்.
அடிவானின் அழகிய வர்ணங்கள்
பூதல மாந்தர் நாம் கண்டு வியந்திட
அவனது அற்புதமன்றோ!

கவிஞர் செண்பகச்சோலையாள்,ஆய்ஷ்(இலங்கை)

# நாற்றிசையும் புகழ்வேனே

பாடுகின்ற குயிலே
பாசமுள்ள அத்தானும்
நாடுகின்ற என்னை
நாள்தோறும் சந்திக்கவே
ஆடுகின்ற மயிலிலே
அமர்ந்து வரச்சொல்லிடு
கூடுகின்ற உறவாலே
கூட்டமொன்று வைத்து
வாடுகின்ற எங்களுக்காக
வழக்கொன்று வைத்தாலே

நலமாக நாமும்
நாள்தோறும் வாழலாமே
கலகம் மறைந்து
கருணையும் நிறைந்தாலே
உலகத்தில் நாமும்
உவகையும் கொண்டாலே
இலக்கோடு எப்போதும்
இனியதே சிந்திக்க
பலமோடு இருக்கும்
பக்குவத்தை அடைந்தாலே

காதல்கள் எல்லாம்
காசினியில் உருவாகும்
மோதல்களில் விளைந்த
மோகத்தின் தூண்டல்களை
ஆதரவாக கற்றறிந்து
ஆலோசனையோடு தேடினால்
மதமும் இன்றியே
மலரும் இல்லறத்தை
நாதங்கள் முழங்கிட
நாற்றிசையும் புகழ்வேனே



கவிஞர் ப.வெங்கட்ரமணன்,குளித்தலை

# யாதுமாய் ஆகிப்போனது காதல்

இரவுகள் எவ்வளவு நீண்டாலும்
இன்பமாகவே உள்ளது நினைவுகளால்
என்னுடன் நீ இருப்பதால்.
----------

கவிதையாய் இருக்கும் நீ
வாசிக்கும் போது - என்
காதல் கடிதமும் கவிதையானதே.
--------

இமயமாய் இறுகி போயிருந்தேன்
இடியாய் இறங்கி என்னை
இளகி போகச் செய்தாய்.
-------

நிலவின் இதமாய் என்னுடன்
நீ இருப்பதால் சுட்டெரிக்கும்
சூரியனும் சுகமாகவே இருக்கிறது.
--------

நீ இட்ட கோலத்தை மிதிப்பதற்கு கூட
மனம் இல்லையடி — ஒவ்வொரு
புள்ளியிலும் ஓவியமாய் புன்னகை புரிகிறாய்.
--------

என் தோளில் சாய்ந்து செய்த நெடும் பயணம்,
சேரும் இடம் வந்ததும் உணர்ந்தேன் தொலைவும்
நொடிப்பொழுதில் தொலைந்து போனதை.
-------

மின்னல் வெட்டையும் மிக துல்லியமாக
உணர்ந்த நான் உன் கண்வெட்டில்
காணாமல் போனேனடி.
--------

ரயில் பயண பதிவு சீட்டில் என் பெயருக்கு பதில்
உன் பெயரை எழுதிய போது உணர்ந்தேன்,
என் எண்ணத்தில் மட்டுமல்ல எழுத்திலும்
நீ ஆட்சி செய்வதை.
---------

சற்று என்னுடன் வந்து
தெருமுனை தேனீர் கடையில்
என் நண்பர்களை சந்தித்து போ,
தேவதையுடன் வாசம் செய்கிறேன்
என்பதை நம்ப மறுக்கிறார்கள்.



கவிஞர் ஆனந்த் கு.வை.ஜெயராமன், சேத்தியாத்தோப்பு

# சிலப்பதிகாரம் (இருபத்தி ஒன்பது)

28. நடுகற் காதை

1. சேரனின் வெற்றிப் பெருமிதம் :

சேரன் செங்குட்டுவன் வீரவாள் ஏந்தி வஞ்சிமா நகர் அடைந்தான்
வரவேற்று ஆடிப்பாடும் பெண்கள்,"உலகாளும் சேரமான் வாழ்க".
சிரம் உயர்த்தி வெற்றி களிப்புடன் போர் வீரர்கள் வீடு சென்றனர்
கரம் பிடித்த மனைவியர் கண் பட்டதும் விழுப்புண் வலி மறந்தனர்

2. இளமை விருந்தும் , இன்னிசை விருந்தும

கோவைக் கனி இதழ்கள், கயல் விழி பெண்கள் கணவரை நாடினர்
ஆசை தீர தழுவி இனிய விருந்து கொடுத்தனர், விருந்து பெற்றனர்
இசை நரம்புகளை இழுத்து கட்டி யாழில் பண் பாடினர் பாணர்கள்
பாலைப் பெண்கள் சேரனை துதித்து பாடி பரிசுகள் பெற்றனர்

3. சேரமானும் பட்டத்து அரசியும்

பட்டத்து அரசி வேண்மாள் அரசன் சேரன் நிலா முற்றம் வந்தனர்
கட்டடங்களைத் தாண்டி மக்களின் மகிழ்ச்சி ஆராவாரம் கேட்டது
திட்டம் போட்டு வடதிசை சென்று இமயம் வெற்றி, பாராட்டினர்
பட்டத்து அரசி சிவனின் கொடு கொட்டி ஆட்டத்தை ரசித்தாள்

4, சோழனும் பாண்டியனும் சேரன் வெற்றியை நகைத்தல் :

போருக்கு அஞ்சி ஓடிய கனகவிசயனை பிடித்தது பெரும் வெற்றியோ?
மார்தட்டி எதிர்த்து நிற்காத தாசிகளோடு போரிட்டது போல் அல்லவா?
பார்போற்றும் சேரனுக்கு இதில் என்ன பெருமை இருக்கிறது என்றனர்
கார் மேகம் கலைந்தது போல் ஓடிபதுங்கிய சோழனும் பாண்டியனும்

5.மாடலன் சேரன் சினம் தணித்தல்:

"கடல் சூழ்ந்த உலகை ஆளும் வேந்தனே , வாழ்க" என்றான் மாடலன்
திடமாக நின்று நேர்வாயில் போரிட்டு சோழர்களை வென்ற வீரனே
இடும்பில் நடந்த போரில் பாண்டியனை ஓட ஓட விரட்டிய வில் வீரனே
வடபுல மன்னர்களை கங்கைக் கரையில் பதறவிட்ட பார் வேந்தனே

பொன்மயமான இமயம்வரை சென்று வில் கொடியை நாட்டியவனே
ஊண் உறக்கமின்றி போர்க்களமே வாழ்க்கையாக வாழ்ந்த தீரனே
வான் உள்ளவரை நின் புகழ் என்றென்றும் நிலைத்து பேர் சொல்லும்
வீணர்களின் பழிச்சொல்லை புரம் தள்ளி நீவீர் நீடு வாழ்க என்றான்

6.7. அறம் செய்து வாழ்க என்றான் மாடலன் :

அவரவர்கள் நல்வினை தீவினைக்கு ஏற்ப அடுத்த பிறவி அமையும்
எவராகினும் உணர்க, இதுவே ஆன்றோர் கூறிய மெய்ம்மொழியாகும்
துவரை விதைக்க அவரையா முளைக்கும் போட்டது தான் கிடைக்கும்
தேவரேயானாலும் மண்ணுலகம் வந்து மக்களாய் பிறவி கொள்வார்கள்

மாடலனாகிய நான் உம்மைப் புகழ்ந்து பரிசுகள் பெற வரவில்லை
தேடாமல் கிடைக்காது, தேடிய புகழ் காலத்துக்கும் சரித்திரம் பேசும்
கூடி வந்த செல்வத்தில் பெருநல் வேள்விகள் நீ செய்ய வேண்டும்
ஊழியோடு ஊழி உலகம் காத்து நீடுவா ழியரோ நெடுந்தகை !"




8. கண்ணகிக்கு கோயில் :

வேங்கை மரத்தின் கீழ் நின்ற கற்புச் செல்வி கண்ணகி ஆவள்
அங்கத்தில் ஊனம் கண்டு பாண்டியனோடு போராடியவள்
இங்கு அந்தணர், ஆசான், சிற்பக் கலைஞர்கள் ஒன்று கூடினர்
ஈங்கு சேரன் கண்ணகி பிரதிட்டை செய்து கோயில் எழ்ப்பினான்
நடுகற்காதை நிறைவுற்றது .

தொடரும்...

கவிஞர் ந.திருக்காமு

# காற்றுவெளியிடை கண்ணம்மா

காற்றுவெளியிடை_கண்ணம்மா
நின்காதலை எண்ணிக் களிக்கின்றேன்!

காற்று வெளியிடை
கண்ணம்மா நின்
காதலை நாளும்
எண்ணிக் களிக்கின்றேன்.

கண்கள் சொல்லும்
கவிதைகளில் கவிழ்கிறேன்
கறும்புச்சாறு பிழியும்
இதழ்களில் உறைகிறேன்

உதய காலத்தின்
உன்னத ஆதவனின்
உறுக்குலையா கதிர்களை
உதிர்க்கிறாய் விழிகளிலே.



இதயங்களின் அறைகளிலே
இன்பங்களின் ஆக்கிரமிப்பிலே
இன்னும் படபடக்கிறதே
இமைப்பறவைகளின் இறகுகளே.

வானவில்லின் வசந்தங்களை
வாசலில் கொட்டுபவளே.
வண்ணங்களின் எண்ணங்களின்
ஏக்கங்கள் தீர்ப்பாயோ?

கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை

# புகைப்படக் குறிப்பு

பக்கத்தைத் திருப்பும் விரல்களை
சட்டென்று நிறுத்துகிறது
கருப்பு வெள்ளையிலான குழு புகைப்படம்

கண்களை எடுக்க முடியாதபடி
மெய் மறந்து நின்றிருந்தோம்
5ம் வகுப்பு ஈ பிரிவு மாணவர்களாக.

உதிர்ந்த சிறகைக் கொண்டு
எந்தப் பறவையின் சிறகென்பதை
கண்டுபிடிக்க முடியாததைப் போலவே இருக்கிறது
பெயர் மறைந்து போன
சீருடை பூண்ட நண்பர்களின் முகங்கள்

கீழும் மேலுமாக நின்றிருப்பவர்களுக்கு நடுவில்
மர நாற்காலியில் அமர்ந்திருக்கும்
ரெஜினா ராணி டீச்சரின் முகமும்
காதோரம் சூடிய ஒற்றை ரோஜா மலரும்
வருடங்கள் கரைந்தும் வாடவேயில்லை.

மீண்டும் அதே போல் பெஞ்சில் ஏறி நின்று
சிரிக்க வேண்டுமென்ற ஆசை
கடல் அலையாக எழுந்து கொண்டே இருக்கிறது.

வாழ்வில் எதிர்கொள்ளும்
அபூர்வமான தருணங்கள்
இரண்டாம் முறை நிகழ்வதே இல்லையென்ற
பேருண்மை மட்டும்
ஞாபகத்தை கீரிக் கொண்டே இருக்கிறது,
புகைப்படத்தைக் காணும்
ஒவ்வொரு முறையும்



கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு

# வார்த்தையின் வல்லமை

எண்ணங்கள் வார்த்தைகளாக மாறுகிறது
வார்த்தைகள் வழிகளாக மாறி
வாழ்க்கை பயணத்தில்
நாம் பயணிக்க வழி வகுக்கிறது.
வாழ்க்கை பயணத்தில்
ஒன்று நாம் புரிந்து கொள்ள வேண்டிய
யோசித்து செயல்பட வேண்டிய ஒன்று
நல்ல எண்ணங்கள் நல்ல வார்த்தைகளை
பயன்படுத்த வேண்டும்
அவ்வாறு பயன்படுத்தலாம்
வாழ்க்கை நமக்கும்
நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும்
நன்மை பயக்கும்



கவிஞர் ஜெ.தேவி ராஜசேகர்,சென்னை

# அவளுடன் ஓர் தேநீர் விருந்து

அவளின் இதழில்
இதம் பெற தேநீரும் ஆசிக்கும்.

அவளது உதட்டோடு உரச
கோப்பையும் அவசரம் கொள்ளும்.

அவளது உதடுகளில் ஒத்தடம் கொடுக்க
கைக்குட்டையும் உயிர் பெறும்.

முழங்கை ஊன்றி மேசையை தொட்டால்
மேள தாளத்துடன் நடனமாடும் அவை.

அனிச்சையாக பாதம் தரையில் பட்டால்
குளிர்ப் பிரதேசமாகும்.

அவளது உதடுகளின் அசைவிற்கு
உணவகப் பணியாளனும் தவம் கிடப்பான்.



அவள் தரும் மீதி சில்லறை
அவனுக்கு பிரசாதம்.

அவளது சுவாசத்தால் நிரம்பிய
தேநீர் விடுதி கவிதை தொகுப்பு.

கவிஞர் மு.அமானுல்லாஹ் பாகவி,செங்குன்றம்

# மாலை நேரம்

அந்தி மாலை சூழ்ந்து இருக்க
அழகாய் பறவைகள் படையெடுக்க
வெள்ளி நிலா காத்திருக்க
வெட்கத்தில் நட்சத்திரங்கள் பூத்திருக்க
இரவு மெல்ல குடை விரிக்க
இதமான காற்று குளிர் எடுக்க
இயற்கையின் படைப்பு பிடித்திருக்க
கற்பனை மெல்ல ஊற்றெடுக்க
பேனாவை நான் எடுக்க
பல வார்த்தைகள் கிடைத்திருக்க
கவிதையாய் அதை கோர்த்திருக்க
தமிழ் தாய்க்கு மாலை சூட்டி இருக்க
தமிழ் தாயின் பாதம் பணிந்திருக்க
உன் மகளால் நான் இருக்க
என் நாவில் நீ குடியிருக்க
உன் கருணை எனக்கு கிடைத்திருக்க
தமிழ்த்தாயி நீ என்றும் எனக்குத் துணை இருக்க




கவிஞர் சௌ.தாரா,சேலம்

# ஒருநாள் மாறும் ஒலி

ஊரெல்லாம் சுற்றி வருகிறது
மூன்று சக்கர வாகனம்
காது கிழிக்கும் இரங்கல் செய்திகளையும்
திருவிழா பசனைகளையும்.
தெருவிற்கு ஒருமுறை
ஓரிரு நிமிடங்களுக்கு
ஒருமுறை என்றும்
ஓயாமல் கூவுகுறார் கட்டக்குரல் மன்னன்
எடுத்துவிடப்படும்
நேரமும் இடமும், ஆஸ்தியும் ஊரும்,
பணியும் பதவியும், மகனும் மகன்களும்,
மகளும் மகள்களென அனைத்தையும்
ஓயாது ஒப்பித்து நகரும் அவரிடம்
நிதம் ஒரு இரங்கலின்  முடிவிலும்
காது கிழிய
இது என்று வரை என்று கேட்டு
அடுத்ததொரு இறங்கலையும்
அடுத்த தெரு மாரியம்மனின் திருவிழா
கொண்டாட்டத்தையும் சொல்லி
நன்றி வணக்கமென மௌனமிக்கிறது
நாலாபக்கமும் உரிமையாளரின்
குரலில் கத்தி ஒரு சில நொடி
உர்ரென கதறும் ஒலிப்பெருக்கிக்கு
கண்டிப்பாக ஒருநாள்
வேறு குரல் மாறும்.





கவிஞர் சே கார்கவி கார்த்திக்,நாகப்பட்டினம்

# என்னவள்

அவள் உருவமென்று
ஏதுமில்லை என்னிடத்தில்!
என் உருவமென்று
ஏதுமில்லை அவளிடத்தில்!
உறவென்றும்
ஏதுமில்லை எங்களிடத்தில்!
சரியாக பேசியதும் இல்லை
பிறரிடத்தில்!
வாசிப்பு எனும்
புள்ளியில் இணைந்தோம்!
நானும் அவளும்!
இது வாழ்க்கை எனும் புள்ளியில்
இணைக்குமா ?
எனும் கேள்விக்குறியோடுதான்
தொடர்கிறது
எங்களின் பயணம்!
காலம் பதில் சொல்லட்டும்!



கவிஞர் தினேஷ் கண்ணா,வழுதாவூர்

# என்னுள்ளே நீ

உறவிலே தந்தைக்கு மாமன் மகன் நீதானே
உருவத்திலே ஒத்திருந்தாயே நீயும் தானே
உன்னோடு விளையாடிய நாட்களும்
உள்ளமதில் அறியாவயது நாட்களும் நிழலாடுதே
உன் வார்த்தைகளுமே அசரீரியாக
உன்மொத்த அன்புமே அம்முக்காக
உன்னுடன் இணைந்த பள்ளி நாட்களுமே பளபளப்பனாதாய்,
உன் பாடங்களோடு என் வீட்டுப்பாடங்களும் கணக்கில்லாததாய்

உருவான அன்பிலே ,உதித்ததே காதலும்
உறவுகளை அழையாமலே மனைவியானேனே!
உண்மையறியா வயதிலே
உண்மையிலேயே படைத்தவனும்
உசித வாழ்விலே கடவுளும்முடிச்சிட்டானே அன்றே
உரிமையானானே மனைவியாக நான் உனக்கு
உச்சி வகிட்டில் பொட்டுவெச்சி
உச்சி முடியில் பூவும் வெச்சு

உலகமறியாமலே உரிமை கொண்டாயே
உன்னத நட்புகளோடு மட்டும்
உல்லாச திருமண வாழ்விலே
உல்லாசமாக வாழத்தானே
உசிதமான உறவாய் ஆனானே
உக்ரமான பல பந்தத்தாலே
உலையின் தீயாய் சில நாட்களும்
உம்மென நகர்ந்ததே பல நேரங்களுமே



உன் அணுவையும் என் கருவிலே
உள்வலியோடு நானுமே சுமந்தேனே
உனதுருவமாய் ஒருவனும்
உன்னவளின் உருவமாய் ஒருவனும்
உன்மத்த காதலின் பரிசாக
உணர்வுமிகு காதலுக்கு
உளியில்லா செதுக்கிய சிற்பங்களாக
உவகையாக இறைவனும் அளித்தானே!

உயிருள்ளவரை என்னுள்ளே நீ
உடனிருந்தே காதலோடு வாழ்வேனே!

கவிஞர் நீலாசுபாஷ்,ஆக்கூர்


# என் இதயம் உன்னிடம்

இதயம் இல்லாதவன் என
வசைபாடி சென்றார்கள்
அவர்களுக்கு தெரியாது
என் இதயம் உன்னிடம்
உள்ளது என்று.

என் இதயம் உன்னிடம்
இருப்பது அறியாமல்
இறைவனுக்கு தருவதாய்
சொல்லி விட்டேன்
என்ன செய்வது.

என் இதயம் உன்னிடம்
இருப்பது தெரியாமல்
தமிழன்னையும் போட்டி போட்டு
வந்தால் நான் என்ன செய்வது.

இதயம் இல்லாமல்
தவித்து வருகிறேன்
உன் இதயத்தை
கொஞ்சம் இரவல் தா



கவிஞர் செ.இலட்சுமணக்குமார்,ஈரோடு

# நீ நீயாய் இரு!

மகிழ்ச்சி என்னும் மாபெரும் செல்வம்
முகத்திலும் அகத்திலும் உள்ளோரைக் கண்டால்
கடுகென வெடிக்கும் பொறாமைக்கு முன்பே
சிதறியேப் போகும் யோசிக்க மறந்தால்

பணத்தைக் கூடச் சேர்க்கலாம்
நிலபுலன் கூட வாங்கலாம்
தங்கம் வைரம் அணியலாம்
மகிழ்ச்சி இழந்தால் பயனென்ன?

கலவரம் தாங்கிய உறவுகள்
நிலவரம் கெடுக்கப் பார்க்குமே
கலகம் செய்யும் உலகமடா
நலன்கள் செய்வது எப்படியோ?

மற்றவர் கருத்துக்கு செவிசாய்த்து
உற்ற மகிழ்ச்சியை இழக்காதே!
நியாயமான விருப்பத்தை
நிபந்தனைக்குள் திணிக்காதே!



ஆட நினைத்தால் ஆடிவிடு
நடனம் என்னும் கலையை மதித்து
பாட நினைத்தால் பாடிவிடு
கேட்பவர் மனதை குளிர்வித்தே
ஓட நினைத்தால் ஓடப்பழகு
தடகள போட்டியில் தடம் பதிக்க
படிக்க நினைத்தால் படித்துவிடு
பாரினில் பயமின்றி பவனி வர
எழுத நினைத்தால் எழுதிவிடு
எழுத்தாளன் என்னும் அடையாளம் காட்டி
உழைக்க நினைத்தால் உழைத்துவிடு

உழைப்புக்கு உதாரணம் உலகம் சொல்லிட
தொழில்முனைய நினைத்தால் முயன்றுவிடு
முதலாளி என்னும் முகவரி காட்டிட
சிரிக்க நினைத்தால் சிரித்துவிடு
சிலரது முகம் கண்டு மறுக்காதே
உனக்குள் தடையை போடாதே
நீயே சிறைக்குள் சிக்காதே

கவிஞர் திருமதி மோ.கோமளாநேதாஜி

# விடுதி வாழ்க்கை

அறிவின் சிகரம் தொட
தொலை தூரம் வந்த
கண்ணீர் கதை சொல்லவா




இல்லத்தை பிரிந்து
விடுதியில் நுழைந்த
உள்ள குமுறல் சொல்லவா

பட்டங்கள் பாரில் பெற்றிடவே
பந்தங்கள் நான் பிரிந்து விடுதி வந்த
சோக பிரிவை செப்பவா
கண்ணீரோடு கலங்கி தடுமாறிய
விடுதி வினாடிகள் கூறவா

விடுதி வாழ்கை
விதித்தவன் செயல் என ஏற்று நடக்க
விசித்திர வாழ்வில் இன்பம் நிறைத்த பகுதி என
காலம் உணர்த்திய இன்ப உணர்வை சொல்லவா

அன்பின் மறு உருவமாய் ஆசான்கள்
சொந்த பந்தங்களின் தோற்றத்தில் தோழிகள்
புத்தகம் கற்றுத்தராத அனுபவ பாடத்தை
கற்று தந்த விடுதி வாழ்கை கூறவா

சோகம் மறந்து
சந்தோஷம் சிறகு விரிக்க
சிகரம் தொட சிறகடித்து பறந்த
இதய நாளத்தின் இன்ப தருணம் மொழியவா

கனவுகள் நிறைவேற்றி
காத்திருந்த காலமும் கண்முன்வர
இதயம் உருகியது விடுதி வாழ்வின் பிரிவை எண்ணி

வரமாய் வந்த விடுதி வாழ்வும் நட்பும்
நினைவுகளோடும் தொலை பேசியோடும்
தொடர போவதை எண்ணி
உள்ளம் உடைந்த வலியை உரைக்கவா

கண்ணீர் ஆறுதலாய்
கை தோழியாய் துடைத்து
பட்டத்தை பெயரில் சுமந்து
நினைவுகளை இதயத்தில் சுமந்து
விடுதி வாழ்கை மீண்டும் கிடைக்காத என
வாழ்கை பயணம் ஏக்கத்தில் நகர்வதை கூறவா

விடுதியின் அருமை விலகிய போது
இன்னும் வெளிச்சமாய் தொரிகிறது.

கவிஞர் நசூர்தீன் நப்ரிஸா,அனுராதபுரம்(இலங்கை)

# நாம்

மெழுகுவர்த்தியின் ஒளியை பார்த்து
சந்தோஷப்படும் நாம்.

அது உருகும் நிலையை பார்த்து
கவலைப்படுகிறோம்.

ஒன்றை இழந்தால் தான் மற்றொன்று
கிடைக்கும் என்பார்கள்.

இங்கு சிலர் எல்லாம் இழந்துவிட்டார்கள்
எதுவும் கிடைக்காமலேயே.

இதுவும் கடந்து போகும் என
காலத்தை கடக்க சொல்கிறோம்.

நாம் இருக்கும் நிலையை உணர்வுகளாலும்
மனதாலும் கடப்பதில்லை.

எழுந்து வா! உயர்ந்து வா என
சொல்கிறோமே என்றாவது
யாரயாவது உயர்த்தியிருக்கிறோமா.

உன்னால் முடியும் என்பது ஊக்கம்

நம்மால் முடியும் என்பதே உயர்வு
உயரவிடுங்கள், உயர்த்தியும் விடுங்கள்.



கவிஞர் யாஸ்மின்மஸ்தான்,திருச்சி

# இராமன்

இராமன் இருக்கிறானோ
இருந்தானோ தெரியவில்லை.
இராமனின் பெயரைச் சொல்லி
மாந்தர்களைப் பிரிப்பது எவ்வகையில்
ஞாயம்?



இராவண எதிர்ப்பு விதைத்துத்தென்னவரை
ஒடுக்க தாழி கொடுத்துச் சென்றானா!
மதியிழந்த தமிழினம் கூட்டம் கூட்டமாகக்
கூடுகிறது தமிழினப் பகைவர் திடலில்.

நும் மூன்னோரைப் பெண் பித்தனெனக்
கற்பித்தவன் கற்படிமத்தைத் தொழுவது
என்ன ஞாயம்?

கம்பன் செய்தது பிழையெனத் தருக்கம்
செய்ய வேண்டிய காலம் இது இல்லை!
கம்பன் செய்தது பிழையெனத் தெரிந்தும்
அவனைக் கொண்டாவது ஞாயம் இல்லை!

கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ்நாடு

அகர முதல

# இனியெல்லாம் சுகமே

தத்தரிகிட தத்தரிகிட தத்தரிகிட தத்தோம்
திக்கெட்டும் புகழ் மணக்கும்
தமிழ் எங்கள் உயிரென்போம்
அடுத்தொரு மொழி அறியாதவரை மூடரென்போம்

இலஞ்சம் வாங்கும் அதிகாரிகளை
நாக்கூச ஏசிடுவோம்
ஓட்டுப் போடும் உரிமைகளை
வந்த விலைக்கு விற்றிடுவோம்

கடவுள் மறுப்புப் பேச்சுக்கு
விண்ணதிர கை தட்டிடுவோம்
தேரோடும் வீதியிலே நாங்கள்
கை கட்டியே நின்றிடுவோம்

உழந்தும் உழவே தலை
என்றே முழங்கிடுவோம்
ஆங்கே போராடும் உழவனைக்
கண்டும் காணாமல் சென்றிடுவோம்

காக்கை, குருவி எங்கள்
சாதியென்றே அணைத்திடுவோம்
மனிதனில் மட்டும் வகை
வகையாய் வீதி சமைத்திடுவோம்

வாடிய பயிரைக் கண்டு
வாடியவர் வாழ்ந்த பூமியிது
இன்றோ நசிந்திடும் மனிதம் கண்டும்
வாயில் மூடிச் சுழல்கிறது



எதுவானால் என்ன
இனியெல்லாம் சுகமே
காணும் கனவும் நனவாகும் நலமே
நம்பிக்கையின் வெளிச்சக் கீற்று
விடியலின் வானத்தில் ஒளிரட்டும்.

தத்தரிகிட தத்தரிகிட தத்தரிகிட தத்தோம்

கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜ், பட்டாபிராம், சென்னை

# செந்தூர பொட்டு

தொலைகின்ற மனது
ரசித்து துள்ளலாய்
தூவனத்தில் தலை நீட்டி
துடைக்க மனமின்றி

முகத்தில் பூத்த அரும்புகளின்
அசையும் அழகில்
முத்தமிடும் துளிகளும்
சரிந்து செல்லமாய்



பூங்காற்றே தீண்டாதே
குளிருக்கு இதம் எங்கு தேட
புதிரான தேடலின்
புதியகீதம்

எங்கே எப்போது என் மனம்
தொலைந்தது
வம்படி வழக்கொன்று
வகைதொகையா

செந்தூரப் பொட்டின்
சிகப்பும் அசந்தே போனது
அர்த்தங்கள் கூடிய
அழகிய நினைவிலே

சிலிப்பிய காற்றோ
நொடித்த சென்றது
வண்ணமலர் கூட்டமும்
கிசுகிசுவென ரகசியம் பேசுது

இவள் கலையவில்லை
அசைத்து பார்க்க ஆளுமில்லை
ஆவாரம் பூக்கொப்பு  கலகலத்தது

நிழலொன்று தீண்டுகையில்
விசுக்கென உயர்ந்த விழித்தொடுகை

கண்ணெடுக்காது காதல்
பேசும் மௌனம்
இதழணைப்பில் கரைந்து கலந்தே
நெஞ்சமும் இனித்தே
தேடலை தேடியது

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# இரும்பு மனுஷி


இன்னல் பல வந்தாலும்
இறுதிவரை உழைத்து கொண்டு
இயல்பாய் வாழ்ந்தவர்.
ஒருபோதும் சோர்வடைந்து
சோகத்தில் வீழ்ந்தவர் இல்லை.
தவறு என்றால் தடுத்து நிறுத்தும்
துணிவும்,தைரியமும் நிறைந்தவர்.
பேச்சிலும், செயலிலும்
இம்மியளவும் குறையாத குணம் மிகுந்தவர்.
இரும்பு மனுஷியாய் இருந்தாலும்
இளகிய இதயத்தில் அன்புக்கு மட்டும்
என்றுமே பஞ்சமில்லை.
ஏழ்மையிலும் கை ஏந்தாது எளிமையாக வாழ்ந்து
சொர்கத்தை கையில் தந்தவர்.
இரும்பு போல கம்பீரமான மனஉறுதி கொண்டவர்.
உழைப்பின் மகத்துவத்தை உணர்த்தி ஊக்கம் தந்தவர்.
நெஞ்சு நிமிர்த்தி நேர்மையாக வாழ வழி வகுத்தவர்.
தோல்வியை கண்டு துவளாமல்
தன்னையே செதுக்கிய செம்மல் இவர்.
இறப்பிலும் உன் தைரியத்தை விட்டுவிடாதே என்று
பயத்தை விரட்டி கண்ணை மூடியவர்.
நெஞ்சை விட்டு அகலாத உன் முகம்
தன்னலமற்ற தாயின் முகம்.
எல்லோரிடமும் இருக்கிறது
தைரியமும், மன உறுதியும்
அதை வெளிப்படுத்தும் ஒவ்வொரு பெண்ணும்
இரும்பு மனுஷி தான்.



கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# கயமை

மேற்குதிசை கிரணங்களில்
நீண்டு விழும்
நிழல்போன்று நிழலாகிப் போகும்
நீண்டும் நிசமாகாத
விடியலின் சபதம்



விரல்விட்டு எண்ணும்
வகையே இருப்பினும்
விதியதன் போக்கில்
விளையாடி விட்டு களைப்புறும்

எழிற் களஞ்சியமென வகுத்தோர்
சட்டைப்பையில்
பாதுகாப்பென முடங்கிக் கிடக்கும்

பகுத்தறிவு பேசும் சொற்களில்
நாக்கு போல அடிக்கடி பற்களில் சிக்கும்


கயமை சமூகமென குத்திவிட்டு
தானும் சமூகமே யென வாதிடும்

கவர்ந்து வந்தவன் யாராகினும்
தலைவனே யாகினும் கயமையே

நிந்தித்த சொல்லில் குழையும்
எவரும் சிந்தைக்கு கயவரே

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# காயங்களுடன் நான்



காயங்களை நான் ஏற்கிறேன்
எனக்கான மருந்தாவதும் அதுதான்
காயங்களை நான் நினைவு கூறுகிறேன்
அதனை மறக்க முயல்வதால்

காயங்களுடன் சினேகிக்கிறேன்
கனவுகளை நோக்கித் துரத்துவதால்
காயங்களுடன் பயணிக்கிறேன்
அதனை கடக்க விரும்புவதால்
காயங்களுடன் கண்ணாம்பூச்சியில்
வெற்றிகளைத் தேடுகிறேன்

காயங்களுடன் கைகோர்க்கிறேன்
தனிமையின் முகவரி அறிய
காயங்களெனும் தேர்வறையில் வினாக்களுக்கு விடை தேட
விடைகளின் முடிவோ வினா குறியாய்
காயங்களை நான் நேசிக்கிறேன்

பகலில் சூரிய கதிர்களாய் வெம்மை காட்ட
இரவிலோ நிலவொளியாய் நிழலாடுவதால்
எங்கெங்கோ பட்ட வலிகள் என எண்ண
என்னை செதுக்கும் உளிகளாய்
எனவேதான் காயங்களை நேசிக்கிறேன்

காலங்கள் மாறலாம்
காயங்களும் மாறலாம்
நம்மையும் மாற்றலாம்

கவிஞர் கீர்த்தனா பு,திருப்பூர் மாவட்டம்

# நீயும் நானும்

என்னை எதிர்பார்க்காதே இன்று
உன் வேலைகளை நீயே செய்துகொள்
என முன் அறிவிப்பாள், இன்று குளிக்கும் போது
அவள்தான் முதுகே தேய்த்து விட்டாள்

அறுசுவை உணவெல்லாம் வேண்டாம், அன்னம்
பொங்கவாவது பழகு என அறிவுரை தந்திடுவாள்
தப்பித்தவறி நான் சமையலறையில்
நின்றால் அவள் உடல் வெந்திடுவாள்

அங்கும் இங்கும் உருளாமல் அடக்கமாக
படுத்து உறங்கு என உளருவாள்
ஒருநாள் கூட என் மீது கை போடாமலோ?
உறசாமலோ? அவளால் தூங்க முடியாது

நேற்று முழுதும் இழுத்துப் போர்த்திக்கொள்
இடுப்பில் சொருகிக்கொள் என உபதேசம்
இன்று மழையில் இருவரும் போட்ட ஆட்டம்
கண்டு மேகத்திற்கே காய்ச்சல் வந்திருக்கும்

அம்மா! நீ என் வாழ்க்கைக் கவிதையின்
முரண்பட்ட இயைபு நயம்
நீ அருகில் இருந்தால் என்
புவியில் ஏன் சூர்யோதயம்

என்ன! சொல்வதேதும் விளங்கவில்லையா?
விடு மீண்டும் புதிதாக தொடங்கலாம்
நீ என நானும், நான் என நீயும்
நீயும் நானும் மட்டும் சரிதானே



கவிஞர் ச.நந்தினி

# காற்று எழுதும் கவிதை

இடறி விழ
நேர்ந்தால்
இதயம்
பதறிடுவாள்
இமைபோல
காப்பாள்
தெய்வத்திற்கு
நிகரென
வைத்து பார்க்க ஆசை
தெய்வமே
பொறுத்தருள்க
அவள் எனக்கானவள்



கற்பனைக்கு
அப்பாற்பட்ட
காதலியின்
தோழன் நான்
நாங்கள்
காற்று
எழுதும் கவிதை!

கவிஞர் ஆர்.மோகன் ராஜ்,சென்னை

# பரிசு

அசட்டுத் துணிச்சலும்
அசாதாரண தைரியமும்

ஆசை துறத்தலும்
ஆங்காரம் இன்மையும்

இன்னல் இல்லாமலும்
இசையுடன் ஐக்கியமும்

ஈரடி குறளாய்
ஈன்றவளுடன் வாழ்ந்திட

உன்னைப் போல் ஊரிலும்
உலகிலும் யாரும் இல்லை

ஊடலின்றி நன்மையாய்
ஊருடன் ஒத்து வாழ

எண்ணும் எண்ணமதில்
எதிர்த்திடாது இருந்திட

ஏற்றமிகு வாழ்வுடன்
ஏகாந்தமும் நிலைத்திடும்!

ஐயமில்லை என்றும்
ஐயன் வழி நடந்தால்

ஒருவருக்கு ஒருவர்
ஒற்றுமை கொண்டிட்டால்



ஓதிடு பிறருக்காக
ஓடிடு இலக்கு நோக்கி

ஔசிதமாய் நீயும்
ஔவை வழி நடந்தால்

அஃதோர் பரிசு உனக்கு
நிச்சயமாய் காத்திருக்கும்!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# உனக்கான பாதை தேடு

உறவுகள் பழித்தாலும்
நட்பு வட்டம் தொலைந்தாலும்
ஆழந்த சித்தத்தில்
தன்னம்பிக்கை மலர

வீ நிலைக்கு தள்ளப்படும்
முன்னரே விளைவுக்கு
வழி தேடு.



பார்வை மங்கி காட்சிகள்
இருளும் முன்
ஒரு வழிப்பாதையில்
பாதம் பதித்திடு.

காலமும் காத்திராது.
பருவமும் காத்திராது.
அவனியோடு மாரி சேர
விதையும் மண் சேர

பிரசவிக்கும் நிலமகளின்
சேயாய் எண்ணற்ற தளிர்கள்.
காலம் கடத்திட கடத்திட
திவலையே பாதாளம் தள்ளுவான்

புலனித்து செயல் கொள்.
புதினம் பல படைக்கா விடினும்
புதினத்தின் வாசிப்பாளனாய்
கடை வரை நீடித்திடு.


ஓய்வற உழைத்து
ஓடாய் தேயும் வரையில்
ஓடோட வழி தேடு.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# நானும் காதலும்

நானும் காதலும்
நற்றமிழோடு இணைந்தோம்
மானும் சீதையுமாய்
மகிழ்ந்து விளையாடினோம்

இதழோடு உச்சரித்து
இதயம் வரைநனைந்தே
நாதமாய் இசைத்து
நயனங்கள் கொண்டோம்



உயிரோடு மெய்யான
உணர்வூட்டும் மொழியே
பயிர்போல காத்து
பார்த்தே இரசித்தேன்

கருவறை தொட்டுக்
கன்னித்தமிழோடு கலந்தேன்
உருகி நேசித்து
உள்ளத்தால் யாசித்தேன்


என்னையாளும் காதலே
என்னுயிர்த் தேன்தமிழே
மண்ணோடு போகும்வரை
மனதோடு சுவாசிப்பேன்

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# மாலவனும் வைணவமும் (பகுதி 20)

## பெரியாழ்வார் தொடர்ச்சி - 2

மதுரைநகர் சமயவாதம் தன்னிலவர் வென்றிட்டார்!
மாமன்னர் வல்லபதே வரையத்தை நீக்கிட்டார்!
பெரியாழ்வார் மன்னர்தம் பட்டத்து யானைமேல்
பவனிவர வல்லபரும் மற்றோரும் பின்தொடர
ஸ்ரீதேவி ஸமேதராய் பெருமாளோ புள்ளரசின்
மீதமர்ந்து விண்ணினிலே திருக்காட்சி அருளினாரே!
வடிவழகு மயக்கத்தில் கண்ணேறு கழித்திடவே
முயன்றதால் ஆழ்வாருள் பெரியவராய் பெரியாழ்வார்
பெரியாழ்வார் ஆனாரே! அரங்கனவன் திருவாக்கே!
பெரியாழ்வார் திருபல்லாண் டுபாடல்தான் சாற்றுமறை
ஆனதுவே! வணவரின் தினசரியாம் வழிபாட்டில்
துவக்கத்தும் முடிவினிலும் இடம்பெற்ற சீர்மைத்தே!
விழாக்காலம் புறப்பாட்டில் திரும்புகையில் இடம்பெறுமே!
ராமனுஜர் வழிப்படியே பின்பற்றும் வைணவரின்
மாலாலயம்ஆனுசரித்தல்! பாண்டியனார் வல்லபரின்
ஓரிரவு நகர்வலத்தை திண்ணைதனில் உறங்கிய
கங்கையில் நீராடி திரும்பிவரும் அந்தணரை
சற்றெழுப்பி அறிந்தநீதி சாற்றிடவே கூறினனே!
மழைக்கால தேவைதனை இரவின்து தேவைதனை
பகற்போதில் முதுமைக்கு இளமையில் மறுமைக்கு
இம்மையில் முயற்சிக்க வேண்டுமென்றார்! பட்டர்பிரான்
என்றவிருது அளித்திட்டே வேதப்பயன் கொள்ளவல்ல
மெய்நாவன் வந்தானென் விருதூத பட்டத்து
யானைதன் பவனிகண்டார்! மன்னரோடும் மற்றையர்
பின்தொடர்ந்தார்! பதவியினும் செல்வத்தினும் அறிவாற்றல்
போற்றுமுளம் நாடாளும் மன்னருக்கும் அமைந்ததுவே!
பெரியாழ்வார் பாடல்திறன் ஆழ்ந்துணர்ந்து உய்வோமே!
ஆழங்கால் படுவதனால் பண்ணறிந்து பாடிமகிழ்வோம்!
திவ்யதேசம் சேவித்தும் நல்மங்களா சாசனங்கள்
கற்றுணர்ந்தும் மாலவனின் பக்தியினால் வைணவராவோம்!



கவிஞர் கணக்காயன் (இ.சே. இராமன்)

# துன்பத்தில் இன்பம்!

இன்பமும் துன்பமும் இணைந்திருக்கும் வாழ்வினிலே!
இன்பத்தில் துன்பம் துன்பத்தில் இன்பம்
இறைவன் வகுத்த நியதியென்றார் கண்ணதாசன்!
மனித வாழ்வில் துன்பம் யாவுமே
மனத்தினால் வரும் நோயென்றார் அன்னவரே!
ஈரைந்து மாதங்கள் சுமப்பதில் துன்பம்
பெற்றெடுத்த மழலையைக் கண்டவுடன் இன்பமாகும்!
இனிப்பொன்றே உணவென்றால் நோய்பல அண்டிடுமே!
கோடை வெயிலில் குளிர்நிழல் இனிமையன்றோ?
கடும் உழைப்பு துன்பம்! வெற்றியை
ஈட்டியபின் இறுதியிலே எய்திடுவர் பேரின்பம்!
துன்பமெனும் சோதனை நேர்கையில் மனிதருக்கு
நண்பர்களின், உறவுகளின் உண்மைமுகம் புலப்படுமே!
இலையுதிர்காலம் மரங்களுக்கு துன்பம்! பருவமாற்றத்தில்
துளிர்த்திடும் இலைகள் தந்திடுமே இன்பம்!
துயர்விளைக்கும் துன்பத்தை ஏற்றிடும் மனமிருந்தால்
மாய்ந்திடும் மனக்கவலை! துன்பத்திற்கு துன்பமது!
வன்மத்தால் துன்பம்! மன்னித்தல் இன்பம்!
தன்னம்பிக்கை, தளராமனம் இவ்விரண்டும் பெற்றிருத்தல்
துன்பத்தில் இன்பம் துய்த்திட வகைசெய்யும்!
நேர்மறை சிந்தனையைக் கொண்டிருத்தல் இன்பம்!
"கடலளவு கிடைத்தாலும் மயங்க மாட்டேன்!
கடுகளவே ஆனாலும் கலங்க மாட்டேன்!
உள்ளத்தில் உள்ளதுதான் உலகம் கண்ணா!
உணர்ந்து கொண்டால் துன்பமெலாம் விலகும்
கண்ணா! " கவியரசர் துன்பத்தில் இன்பம்
துய்த்திடும் வழிசொன்னார்! அதற்கும் மேலாக
நன்மை செய்து துன்பம் வாங்கும் நல்லிதயம்
வேண்டுமென இறைவனிடம் வேண்டுகிறார்! இதைவிட
வேறுண்டோ? இன்பமுடன் துன்பத்தை வெல்லும்வழி!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# நிலவுக் காட்சி

மெல்லச் சிரிக்கும் வானம்
மெதுவாய் அழைக்கும் நேரம்
இல்லத்து முற்ற வெளியில்
இருப்பேன் விளக்கு ஒளியில்!



கருமைக் கூந்தல் நதியில்
குழந்தைநீ தவழ்வாய் பனியில்
அருமைத் தாரகைகள் சூழுகையில்
அழகோ அழகுநீ என்கையில்!

மறைக்கும் கரிய மேகங்கள்
மேனியில் நீயணியும் மேகலைகள்
'கறைக்கும்' உதவிடும் கொள்கைகள்
களங்கமே அற்றதுன் கண்பார்வைகள்!
*

நட்சத்திர வாசல் நின்முற்றம்
நீள்வான் கோள்கள் உன்சுற்றம்
அட்சய பாத்திரம் உந்தன்முகம்
அல்லல் அறுப்பது உனதுஅகம்!
*

இருளிடை ஒளிரும் உன்வண்ணம்
எழுதிடவே துடிக்கும் என்னெண்ணம்
அருளும் இறையின் கொடைவண்ணம்
அமுதமே ஒளியாய்நீ தருமெண்ணம்!
*

அள்ளவள்ள ஊறும் தண்ணீராம்
அகிலத்தில் பெருகும் தண்தமிழாம்
உள்ளத்தில் சுரக்கும் கல்வியதாம்
உலகத்தில் நீபா(ய்)ச்சும் பால்நதியாம்!
*

மின்னலும் முழக்கமும் வரும்போதும்
மேலாகவே சிரிப்பாய் எப்போதும்
உன்னில் அச்சம் பிறப்பதில்லை
உலகம் இதனால் மறப்பதில்லை!
*

நானில மாந்தரே கேளுங்கள்
நிலவுக் காட்சியைக் காணுங்கள்
இனிய நெஞ்சம் கொள்ளுங்கள்
இவ்வுலக வாழ்வை வெல்லுங்கள்!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன்,இலங்கை

# என் அப்பா

நான் இவர் இடத்தே
என்றுமே தோற்க நினைக்கின்றேன்
அந்த ஸ்தானம்
எனது அப்பா
நான் நினைக்கும்
உண்மைகளின் நிலைப்பை
என் செயல் திறன் பட முன்பே
அதன் வழியே என்னை
முன்னிறுத்தும்
எனது அப்பா
என் வாழ்வின் நிலை ஓவியம்
முதலே காலமும் இட அறிகை
நலமறிந்த
என் அப்பா
நான் தினம் வாசிக்கும்
மனநிறைவின் வெற்றி நாயகம்
என் அப்பா



கவிஞர் வியாத்தன்.ச.லக்ஷ்ஹரன்

# நிலா மகளுக்கு ஒரு தோழி

நூல் வாசிப்பு அனுபவம் — கவிதைத் தொகுப்பு

ஆசிரியர் : கவிஞர் இரா. மதிராஜ்
வெளியீடு : இயக்கி பதிப்பகம்

சங்க இலக்கியங்களில் வந்து நிற்கும்,என்றும் நினைவில் நிற்கும் தோழியை ஞாபகப்படுத்தி விட்டு. "நிலாமகளுக்கு ஒரு தோழி" என்ற தனது மூன்றாவது படைப்பு இலக்கியத்தில். தமிழ் உறவுகளை சந்திக்கும்,கவிஞர் இரா. மதிராஜ் அவர்களுக்கு வாழ்த்துக்களும் வணக்கங்களையும் கூறிக் கொள்வதில் உள்ளம் மகிழ்கிறேன். வளரும் இளம் கவிஞர்களில் கவிஞர் இரா, மதிராஜ், ஒருவர் என்பதை தொடர்ந்து வெளிவரும் அவரதுகவிதைகளும். படைப்புகளுமே சாட்சி.

"வேர்களைப் பற்றி ஒன்றும் யாரும்,
பார்க்க வேண்டியதில்லை அவைகள்
ஒன்றாய் தான் இணைந்திருக்கும்
எப்பவுமே"

மண்ணில் புதைந்து தாங்கிப் பிடிக்கும் வேர்கள், தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய மரங்களின் வேர்களின் ஒற்றுமையை, சாதி மத பேதமற்ற, மனித குலத்தின் ஒற்றுமையை மரத்தின் வேர்கள் வழியாக நின்று பார்க்கும் கவிஞரின் சமூக பார்வை பாராட்டுதலுக்குரியது.

தண்ணீரை விலைக்கு வாங்கும் அவலத்தையும், நீர் வற்றி காணாமல் போன ஊர் கிணறுகளைப் பற்றியும், அரைகுறையாக நிறைவேறும் நீர்மாலை சடங்குகளைப் பார்த்து, தான்பிறந்து வளர்ந்த மண்ணின் வேதனைகளை, கவிஞர் இவ்வாறு பதிவுசெய்கிறார்.

"ஊர் கிணறுகளும் இல்லை,
நீர் மாலை ஊர்வலங்களும் இல்லை,
தண்ணீரை விலைக்கு வாங்கி தலைக்கு மட்டும் தெளித்து
நீர் மாலை சடங்குகள் நிறைவேறுகிறது."

"பூமி பந்தின்
ஓரங்களில் எல்லாம்,
இந்த மதுபானம் பாட்டில்கள். முத்தமிட்டு கொண்டிருக்கிறது."

அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

நூல் வாசிப்பு அனுபவம் கவிதைத் தொகுப்பு

ஆசிரியர் : கவிஞர் இரா. மதிராஜ்
வெளியீடு : இயக்கி பதிப்பகம்

மது மற்றும் மது பாட்டில்களின் கோரப்பிடியில் சிக்கியுள்ள மனிதனையும், அவன் வாழும் நிலத்தையும் பற்றிய கவிஞரின் சமூக பார்வை விசாலமானது.

"இமைகளின் இறுதி
முத்தமே,
மரணமாகிறது." புதிய சிந்தனை பார்க்கும் கோணம். மரணம் குறித்தவரையறை அருமை

"வட்டமடிக்கும் அந்த
வண்ணத்துப்பூச்சி சொல்கிறது,
இன்னும்
சில தினங்களில்
பசுமையைக்
காணலாமென்று...!"

"பூனை இன்று.
ஏன் கறி எடுக்கவில்லை.
என்று.
என்னிடம் கேட்பதாக உணர்கிறேன்....!"

'வெள்ளை நிறத்தொரு பூனை எங்கள் வீட்டில் வளருது கண்டடீர்.' என்று பாரதியார் சாதி மத வேறுபாடுகளை.தவிர்த்துஒற்றுமையை வலியுறுத்தும்பாரதிக்கு பிறகு, கவிஞர் இரா,மதிராஜ் அவர்கள் பூனை மூலம். வேலையில்லா திண்டாட்டம் குடும்ப வறுமை, நடைமுறை வாழ்க்கை சூழலை இவ்வாறு மேற்கோள்காட்டுகிறார்.

"கற்காலம் என்பது எதுவுமில்லை
எனக்கு.
அவளைப் பற்றிய.
அறிமுகம் இல்லாத
காலம் தான்." காதல் திருமணத்திற்கு முந்தைய வாழ்வினை கற்காலம் என்று வரையறை செய்கிறார்.

அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# நிலா மகளுக்கு ஒரு தோழி

நூல் வாசிப்பு அனுபவம் — கவிதைத் தொகுப்பு

ஆசிரியர் : கவிஞர் இரா. மதிராஜ்
வெளியீடு : இயக்கி பதிப்பகம்

இதுவரை
எழுதாதக்
கவிதைகள்
அனைத்தும்
இயற்கை இடமே
இருக்கிறது...!

என்ற தங்கள் கூற்றுபடி பரந்து விரிந்து கிடக்கும்இயற்கையை கவிதைகளாக மொழிபெயர்த்து தமிழ் கூறும் நல்லுகத்திற்கு தரவேண்டும். உங்கள் எழுத்துக்களை வாசிக்க தமிழை சுவாசிக்கும் உறவுகள் பலர் காத்துக்கிடக்கிறார்கள்.

மேலும் உங்கள் படைப்புகள் சிறக்க உள்ளம் கனிந்த வாழ்த்துக்கள்.! நன்றி.!

அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# வைரமுத்து சிறுகதைகள்

**நூல் வாசிப்பு அனுபவம்** **சிறுகதைகள் தொகுப்பு**

**ஆசிரியர் : வைரமுத்து ; விலை : ₹ 300 ; வெளியீடு: அக்டோபர் 2015**




"கள்ளிக்காட்டில் புள்ளத்தாச்சி
கல்லப்பெத்த வீரனடா
சல்லிக்கட்டில் மாடுபுடுச்சா
சரியும் குடலே மாலையடா
செத்த கிழவன் எழுதிவெச்ச
ஒத்த சொத்து வீரமடா"

என்ற பல மனம் கவரும் வரிகளால் இலக்கிய உலகிலும் திரையுலகிலும் தனக்கென தனியிடம் பிடித்த கவிஞர் வைரமுத்து அவர்களின் சிறுகதைகளின் மதிப்புரை இதோ,

தொகுப்பில் உள்ள 40 சிறுகதைகளும் நம் சமுதாயத்தில் தாக்கங்களை ஏற்படுத்திய நிகழ்வுகள், உணர்வுகள், வரலாற்று சிந்தனை என அனைத்தையும் ஒருங்கே காட்டுவதாக அமைந்துள்ளது.

தூரத்து உறவு என்னும் கதையில் " அப்பாவின் மரணத்திற்கு அழமுடியாத(அ) அழத்தெரியாத ஒரு தலைமுறை தயாராகி விட்டது.அழுதல் அநாகரீக பட்டியலில் சேர்க்கப்பட்டுவிட்டது" என்ற வரிகள் சமுதாயக் கண்ணாடியாகின்றன.

அதிகாரமாக பேசும் தன் கணவரை "குரலை உயர்த்திப் பேசுவதை கொலை முயற்சியில் சேர்க்காத இந்திய தண்டனைச் சட்டத்தின் மேல் எனக்கு வெறுப்பு வருகிறது"என பழிக்கிறார் அப்பாவி மனைவி.

ஈழப்போர் வீரர் தன் மகனுக்கு "அ- அம்மா, ஆ- ஆயுதம்,இ-இனம், ஈ- ஈழம் " என கற்பிக்கும் போது என் மூளையில் மின்சாரம் பிறப்பெடுக்கிறது.


காதல் கொண்ட இரண்டு மீன்களின் கதை படித்தபோது நானே நீருக்குள் மூழ்கி மூச்சுவிடாமல் தான் தவித்தேன். கடைசியாக நீரின்றி கரையில் துடித்துக்கொண்டிருந்த பெண்மீனை பார்த்தவண்ணம் கண்மூடிய ஆண்மீன் கனவில் "கண்விழித்து பார்த்தபோது களைந்த வண்ணமே, உன் கை ரேகை ஒன்று மட்டும் நினைவு சின்னமே" என ரகுமானின் பின்னணி இசைதான் கேட்டிருக்கும்.

ச.நந்தினி

# வைரமுத்து சிறுகதைகள்

நூல் வாசிப்பு அனுபவம் | சிறுகதைகள் தொகுப்பு

ஆசிரியர் : வைரமுத்து ; விலை : ₹ 300 ; வெளியீடு: அக்டோபர் 2015




ஆணவக்கொலையால் தன் மகளை இழந்த தாய்" எங்களூர் நெருப்பு வீடெரிக்கும்; காடெரிக்கும்; ஆளெரிக்கும்; நீதியெரிக்கும்.பாவி மக்கா! சாதிய எரிக்கும் நெருப்பை எப்பப்பா கண்டுபிடிக்கப் போறீக". என அவள் வடிக்கும் கண்ணீரில் நம் சமுதாயமே உப்புகைக்கிறது.

கதைகளில் தேவையற்ற பல இடங்களில் முன்னொட்டாக வடமொழி எழுத்துக்களும், வர்ணனையாக இனத்தின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மீசைவைத்த சில வரிகளும் தாவணி போர்த்திய உவமைகளும் இளம் வாசிப்பாளர்களை மடைமாற்றம் செய்ய வாய்ப்பு இருக்கிறது.

எப்படியிருப்பினும் இந்த நூல் தமிழ் பிரியர்களுக்கு இலக்கிய விருந்தாகவே அமைகிறது.


"வாசிப்பை நேசிப்போம்"




ச.நந்தினி

# கம்பதாசன்

கட்டுரை



இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுள் பாரதி, பாரதிதாசனுக்குப் பிறகு இரண்டு பேரை தமிழுலகம் மறந்து விட்டது; ஒருவர் தமிழ் ஒளி; மற்றொருவர் கம்பதாசன். பன்முகப் பேராற்றல் படைத்த கம்பதாசனை தமிழ்கூறு நல்லுலகம் மறந்து விட்டதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

## பிறப்பு:

கம்பதாசன் (செப்டம்பர் 15, 1916 - மே 23, 1973) தமிழகக் கவிஞரும், எழுத்தாளரும், திரைப்படப் பாடலாசிரியரும் ஆவார்.

கம்பதாசன் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் மருங்கே உள்ள உலகாபுரம் என்ற கிராமத்தில், (குலாலர்) குயவர் குலத்தில் சுப்பராயர் - பாலம்மாள் தம்பதிக்கு 1916ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் தேதி பிறந்தார். பெற்றோருக்கு இவர் ஒரே மகன். மற்றவர் ஐவரும் பெண்கள். இவரது இயற்பெயர் அப்பாவு. பெற்றோர் இவரை "இராஜப்பா" என்று செல்லமாக அழைத்தார்கள். கம்பன் மீது அதிக பற்றுக் கொண்டவர் என்பதால் கம்பதாசன் என்ற புனைப் பெயரை வைத்துக் கொண்டார்.

இவரது தந்தை சுப்பராயர் புதுச்சேரியில் உள்ள வில்லியனூரைச் சேர்ந்தவர். இவரது தாயார் பாலாம்பாள் திண்டிவனம் அருகேயுள்ள உலகாபுரம் என்னும் ஊரினர். அதன் காரணமாக கம்பதாசன் தம் தாயாரின் ஊரில் பிறந்தார். இளமையிலேயே சென்னைக்குக் குடியேறினார்


ஆறாம் வகுப்பு வரைதான் தனது படிப்பைத் தொடர்ந்துள்ளார். கவிஞரின் குடும்பத்தினர் அவரது இளமைப் பருவத்திலேயே சென்னையைச் சேர்ந்த புரசைவாக்கம் பகுதிக்கு குடிபெயர்ந்துள்ளனர். அங்குள்ள குயப்பேட்டை நகர சபைப் பள்ளிக் கூடத்திலேயே தமது படிப்பைத் தொடர்ந்துள்ளார். நடிப்புக் கலையிலே நாட்டம் ஏற்பட்டதால், ஆரம்பப் பள்ளிக்கு மேல் இவர் நாட்டம் கொள்ளவில்லை. நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். நாடகங்களுக்குப் பாட்டெழுதினார். கம்பதாசனுக்கு நல்ல குரல் வளம் இருந்தது. நாடகங்களில் பாடுவார். பாடகராகவும் புகழ் பெற்றார். ஆர்மோனியமும் வாசிப்பார்.

குமர தர்மசீலன் இதழாசிரியர்

### வறுமையும் கவிதையும்:

அப்படிப்பட்ட கவிஞரின் வாழ்க்கையின் இறுதிப் பகுதியில் பத்தாண்டுகள் வறுமையில் வாடி துயரங்களை அனுபவித்தார். அதனை அவரே இப்படிக் கூறுகிறார்:

"இன்று என்னை வறுமையில் ஆழ்த்தி, என் வாழ்வைக் குலைத்த சிறுபகை, நரிகளின் கூட்டம். நான் இவ்வுலகை விட்டு இறந்த பிறகாவது உண்மைக் கவிஞன், உலக மனிதன் என்று ஏற்குமாகில் இயேசு கிறிஸ்து கூறியது போல், அவர்கள் அறியாமல் செய்து விட்டார்கள், அவர்களை மன்னியுங்கள் என்று எனது ஆத்மா சாந்தியடையும்."




"நித்தம் வறுமையில் நெஞ்சழிந்து - தன்னை
நேசனெனச் சொல்ல யாருமின்றி
பித்தன் இவனெனக் காட்சிதந்து - உயிர்
பிரிந்தபின் புகழைப் பெறுபவர் யார்?" என்னும் இவர் கவிதை சிந்திக்கத்தக்கது. வாழும் காலத்தில் வறுமையும், அன்பு பாராட்ட ஆட்கள் இல்லாத வெறுமையுமாய் வாழ்ந்தவனுக்கு மரணத்துக்குப் பின் கிடைக்கும் புகழால் பயன் என்ன என்று கவிஞர் கேட்கும் கேள்வி பொருள் பொதிந்தது.

கவிஞரின் வறுமைக்குக் காரணம் அவரது திட்டமிடப்படாத வாழ்க்கை முறையேயாகும். அன்றைய தினம் தமிழ்க் கவிஞர்களில் திரைப்படப் பாடல் எழுதுவதற்கு அதிகத் தொகை வாங்கிய முதல் கவிஞர் கம்பதாசனே!

### திரை துறையில் கம்பதாசன்:

இவர் கவிக்குயில் சரோஜினி நாயுடுவின் சகோதரர். இவரே இந்தித் திரைப்பட இசையமைப்பாளர் நௌஷாத்திடம் கம்பதாசனை அறிமுகம் செய்து வைத்தவர்.

மிகவும் இளமைக் காலத்திலேயே 'திரௌபதி வஸ்திராபரணம்', 'சீனிவாச கல்யாணம்' போன்ற படங்களில் தனது நடிப்புத் திறனைத் காட்டி நின்றார். 1940ஆம் ஆண்டில் வெளிவந்த வாமன "அவதாரம்" என்ற படத்திற்கு
"சூரியனும் ஒரு தொழிலாளி - தினம்
சுற்றும் உலகும் தொழிலாளி
வாரி அலையும் தொழிலாளி - எதிர்
வந்திடும் காற்றும் தொழிலாளி

குமர தர்மசீலன் இதழாசிரியர்

மாரி நதியும் தொழிலாளி - இருள்
மலரும் உடுவும் தொழிலாளி
பாரை நடத்தும் தொழிலாளி - இன்
பரமனடா கலை பிரமனடா"

என்ற முதல் பாடலாக இந்த பாடலை எழுதினார். அதனைத் தொடர்ந்து வேணு கானம், மகாமாயா, பூம்பாவை, மங்கையர்க்கரசி, ஞானசௌந்தரி, அவன், வானரதம்போன்ற பல திரைப்படங்களுக்கு பாடல்கள் எழுதியும், கதை வசனம் எழுதியும் புகழின் உச்சியில் காணப்பட்டார். இதில் அவன், வானரதம், அக்பர் போன்ற திரைப் படங்களில் இவர் எழுதிய பாடல்கள் இன்னும் காலத்தால் அழியாத பாடல்களாகவும், திரைப்பட ரசிகர்களால் மறக்க முடியாத பாடல்களாகவும் காணப்படுகின்றன.

தமிழில் மறுமலர்ச்சிப் பாடல்களை எழுதத் தொடங்கினார். சமதர்மக் கொள்கை கொண்ட கம்பதாசன், தாம் எழுதிய திரைப்படப் பாடல்களில் முற்போக்குக் கருத்துகளை எளிய நடையில் புகுத்தினார்.

தமிழ் உணர்வுமிக்க அவருக்குப் போட்டிகள் நிறைந்த திரையுலகம் அதிக வாய்ப்பைத் தராவிட்டாலும், குரல் அசைவுப் படங்களுக்கு (டப்பிங்) அதிகம் எழுதியிருக்கிறார். "வானரதம்" என்ற இந்தித் திரைப்படத்தின் தமிழாக்கப் பாடலில் எளிய தமிழைப் பயன்படுத்தினார்.


கம்பதாசனின் கவித்திறமையை அடையாளங்காட்டி "கனவு" என்ற கவிதை நூல் 1941இல் வெளிவந்தது

**பாரதிதாசன் வாழ்த்தில் கம்பதாசன்:**

இவரது நூல்கள் பற்றிப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாராட்டியுள்ளார்: "கம்பதாசன் எழுதும் நூல்கள் எனக்கு மகிழ்ச்சியை அளிக் கின்றன. அவை அவராலேயே இயற்றப்பட்டவை. அவரின் நெஞ்சினின்று தங்கு தடையின்றி எழும் ஊற்று. உண்மையில் கம்பதாசன் எண்ணம் நன்று. கவிதை உள்ளம் நன்று. நல்ல கற்பனையே புதுமையை வரவேற்கும் தன்மையே அதைப் போற்றும் ஆற்றலைக் காணுகின்றேன்" என்று கூறியுள்ளார்.

### எழுதிய நூல்கள்:

- கனவு; 1941; வங்கக்கவி ஹரிந்தீரநாத் முன்னுரையுடன்
- விதியின் விழிப்பு
- அருணோதயம்
- பாட்டு முடியுமுன்னே
- தொழிலாளி
- ஆதிகவி
- முதல் முத்தம்
- அவளும் நானும்
- புதுக்குரல்
- நாடக நூல்கள்தொகு
- சிற்பி




### சிறுகதைத் தொகுதி:

- முத்துச் சிமிக்கி

### சிலோன் விஜயேந்திரன்தொகுத்து வெளியிட்டவை

- கம்பதாசனின் கவிதைத் திரட்டு (1987)
- கம்பதாசன் திரை இசைப்பாடல்கள் (1987)
- கம்பதாசன் காவியங்கள் (1987)
- கம்பதாசன் நாடகங்கள் (1988)
- கம்பதாசன் சிறுகதைகள் (1988)
- கம்பதாசன் கவிதா நுட்பங்கள் (1997)

### திரைப்பட பாடல்கள்:

- மின்னல் போலாடுமிந்த வாழ்க்கையே (1953)
- கனவு கண்ட காதல் கதை கண்ணீராச்சே (அக்பர்- 1961)
- கல்யாண ஊர்வலம் வரும் உல்லாசமே தரும் (அவன் - 1953)

"பாம்பு இளைப்பாற புற்று,
பருந்து இளைப்பாற கூடு
கண் இளைப்பாற தூக்கம்
கழுதை இளைப்பாற துறை...என்று
பறவைகளும் மற்ற விலங்கினங்களும்
இளைப்பாறிட இடம் உண்டு - எங்களுக்கு...?''
என்ற கவிதை இதுவரை எந்தக் கவிஞரும் சிந்திக்காதது.

### இறப்பு:

கவிஞரின் கடைசிக் காலம் வேதனை மிகுந்தது. வறுமை, காதல் தோல்வி, காசநோய் மூன்றும் வாட்டி வதைக்க சமூகத்தின் புறக்கணிப்பால் தனித்து விடப்பட்ட கம்பதாசன் இராயப்பேட்டை அரசு மருத்துவ மனையில் 1973 மே 23இல் ஓர் அநாதையைப் போல மரணத்தைத் தழுவினார்.



அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!

நாளை

# நமதே

எப்போதுமே தளர்ந்து விடாதீர்கள்.
வாழ்க்கையில் எப்போதுமே
இன்னொரு வாய்ப்பு இருக்கும்.

அகர முதல இலக்கிய பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை


தொடர்பிற்கு :

9597887847
8870884969




# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com